உளி- 1 | ஓசை-50 | ஏப்ரல்-2021 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



50 வது இதழ்

ஆசிரியர் : ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
மதன் குமார்

அட்டைப்படம் :
ரவி பேலட்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
✆94893 75575

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

மதுசூதன் - 4
மா.காளிதாஸ் - 5
கதிரவன் வி - 6
ரிஸ்கா முக்தார் - 7
வில்லியம்ஸ் - 8
ரா.ராஜசேகர் - 9
சௌவி - 10
ப.தனஞ்ஜெயன் - 11
வத்திராயிருப்பு தெ சு கவுதமன் - 11
பிரபுசங்கர் க - 12
தி.கலையரசி - 13
குமரன் விஜி - 14
கவிதை மொழியன் - 15
கனியமுதுஅமுதமொழி - 16
லெனின் - 17
சுஜாதா கண்ணன் - 18
மலர் மைந்தன் குமார் - 18
விசித்திரன் - 19
சுரேஷ்குமார் - 20
முனியாண்டி ராஜ் - 21
செ.புனிதஜோதி - 22
மு.முபாரக் - 23
முகமது பாட்சா - 24
கா.ரஹ்மத்துல்லாஹ் - 25
கதிர் அவன் - 26
உஸ்மான் - 27
சு.கேசவன் - 27
காயத்ரி ராஜசேகர் - 28
கோ லீலா - 29
நீரை.பாத்திமா - 30
பொம்மிடி மோகன்தாஸ் - 30
க.ராஜகுமாரன் - 31
வீரசோழன் க சோ திருமாவளவன் - 32
கோ.ஸ்ரீதரன் - 33
சுரேஷ்பாபு ராசேந்திரன் - 34
கார்த்திக் திலகன் - 34
வினோதன் - 35
கோவை சசிகுமார் - 36
கி.கவியரசன் - 37
பட்டியூர் செந்தில்குமார் - 38
வளவன் கரிகாலன் - 39



கடவுளின் சாபம்
என்கிறாள் பாட்டி
உதிர்ந்த நட்சத்திரத்தை.
என்னவோ இருக்கட்டும்
வடகிழக்கு வானம்
சிறிய வெற்றிடத்தை
நிரப்பிக் கொள்ளும்
என்றேனும்.
கிடைக்காத சொல்லை
இன்னொன்றால்
நிரப்பிக் கொள்ளும்
கவிஞனைப் போல
ஒன்றின் இழப்பை
நிரப்புதல் எங்கேயாவது
நிகழ்ந்து
கொண்டே இருக்கிறது.

மதுசூதன்



கீழே விழுந்து கிடக்கும் பூவிற்குள்
ஒரு மென் அழுகை உறைந்திருக்கிறது.

அது நகர்ந்து நகர்ந்து
தன் வாழ்வின் எல்லைக்குச் செல்கிறது.

ஒரு நாய்
தன்னை முகர்ந்து பார்ப்பதைத்
தனக்கான அதிகபட்ச அவமானமாக
ஒருபோதும் பதிவு செய்ததில்லை.

பூஜையறை வட்டில் தண்ணீரில்
மல்லாந்து நீச்சலடிக்கிறது
சற்றுமுன் பொறுக்கப்பட்ட பூ.

உச்சபட்ச ஆற்றாமையை, ஒவ்வொரு இதழாக
உதிர்த்துப் போடும் மனதை
தேன் வற்றிய தன் மகரந்தக்குழலால்
சந்தியா ராகமிசைத்து ஆற்றுப்படுத்துகிறது.

இயல்பையும் மீறி யாரோ ஒருத்தி
வரைந்து முடித்த ஓவியத்தில்
தன்னைப் பொருத்தி அழகு பார்க்கிறது
கண்ணுக்குள் விரியும் காம்பற்ற பூ.

**மா.காளிதாஸ்**



**த**ழைய தழைய ஆடை உடுத்தியிருந்தது அவரை
செடியை வேலி

எந்த குயிலின் ஓசையோ தலையசைத்து
கேட்டிருந்தது ஓணான்

மருதாணி செடியில் பூசாமலேயே சிவந்திருந்தது
கோவைப்பழம்

எந்த வேலியும் இன்றி திறந்து கிடந்தது பொதுவென
குளம்

ஊர் விட்டு ஊர் வந்திருந்தன நம்பிக்கையோடு
பறவைகள்

அறுவடை முடிந்து பாதங்களால் பாதை
அமைத்துக்கொண்டிருந்தது
வயல்கள்

பசுக்களை சுற்றும் நாரைகள்
இத்தனை வரைய தெரிந்த என் தூரிகையால்

ஏர் புக வெளி வீசும் மண் வாசத்தை தான்
வரையத்தெறியவில்லை...

**கதிரவன் வீ**



**ஆ**தியில்
அவ்வாறுதான்

இதயத்தின் கதவுகள்
திறந்தேதான் கிடந்தன
எல்லோருக்குமாய்

விருப்பம் போல
புத்தனும்
சிவனும்
இயேசுவும்
அல்லாஹ்வும்
நுழைந்து வெளியேற
ஏதுவாய்

புத்தனின் பாதங்களில் முள் தைக்க
சிவனும் பதறிப்போய் நின்ற
காலமது
இயேசுவின் சிலுவைத்தழும்புகளை
அல்லாஹ்வும் ஆதுரமாய் தடவிக்கொடுத்தவொரு
காலமது

ஆதியில்
அவ்வாறுதான்

இதயத்தின் கதவுகள்
திறந்தேதான் கிடந்தன
எல்லோருக்குமாய்

பின் வந்தனர்
மதம் கொண்டலையும்
மானிடர்
சிலர்

குருதித்தோய்ந்த வாள் முனைகளால்
தத்தமக்கென்று
ஓரோர் இறைவனை
பங்கிட்டுப் பிரித்துக்கொள்ள

பின்னும்
அவர்கள்தான்
இதயத்தின்
கதவுகளை இழுத்து
சாத்தினார்கள்
இதுதான் வரைமுறையென
இறைவனுக்கும்
பாடம் புகட்டினார்கள்

அந்தோ
அப்போது
வெளியேறியவர்கள்தாம்
பின் ஒருபோதும்
திரும்பவே இல்லை
தம் ஆதி நிலங்களுக்கு

புத்தனும்
சிவனும்
இயேசுவும்
அல்லாஹ்வும்

◣ ரிஸ்கா முக்தார்

## அடங்க மறு



திரித்தெழுதிய
படிமத்தின் மீது
இலக்கின்றி ஊர்ந்து செல்லும்
புரிதலற்ற புழுக்கள்
அர்த்த இலைகளை
அவசரமாய் மேய்கின்றன
புரட்சியின் அடைமழையை
பொருட்படுத்தாத எருது
ஆணவத் தீனியை வாயிலடக்கி
சாலையில் நிற்கிறது
காலில் மிதித்த
களிமண்ணெடுத்து
கலைநுட்பத்தோடு வனைந்த
காலச் சிற்பங்களை
காட்சிப் பிழையென்கின்றன
காமாலைக் கண்கள்
உயிரொளியின்
வெளிச்சம் தாங்காமல்
விஷப் பல் முளைத்த
விட்டில் பூச்சிகள்
இருட்டு விளக்கை
ஏந்திப் பிடிக்கின்றன
அங்கச் சதைகளை
அச்சத்தில் நடுங்க வைக்கும்
வீரமுழக்கத்தை
ஞாயத் தராசில் வைப்பதெல்லாம்
தேர்தலுக்கான திரைக்கதை
கனிந்த காட்டரசன்
குளிர்ச்சுனையில்
குனிந்து எழுகையில்
படிந்திருக்கும் பிடரிமயிர்
காய்ந்து பின்
காற்றில் சிலிர்த்துப் பறக்கையில்
அந்தக் கண்ணீரணை
மொத்தமாய் உடையும்..

**வில்லியம்ஸ்**

## நீயில்லாத வாசனை



அதே மரம்
அதே கிளைகள்
அதே பறவைகள்
அதே ஒலிக்கூட்டம்
அதே நான்
அதே நிழல்
அதே வெயில்
அதே காற்று
ஆனால்
நீ இல்லாத வாசனை
நெடியாக நிமிர்கிறது மூளைக்குள்ளும்
இறந்துபோன நண்பனே

ரா.ராஜசேகர்

## நவீன சமையலறை



எரிவாயுவில் எரியும் அடுப்பிருக்கிறது
எப்படிப்பட்ட நீரையும் சுத்திகரித்துக்
குடிநீராக்கும் உபகரணம் மாட்டப்பட்டுள்ளது
கொதித்தலிலிருந்து வெளியேறும் ஆவியை
உடனடியாக வெளியேற்ற
சுவற்றுக்குள் சுழன்று வெளியேற்றும்
காற்றாடி உள்ளது
எல்லாவற்றையும் சூடாக்கித்தர
உயர்ரக சூடேற்றி உள்ளது
குளிரேற்றி அருந்தவும் தின்னவும்
குளிர்சாதனப்பெட்டி உள்ளது
எல்லா சமையல் பொருட்களையும்
அழகாய் அடுக்கி வைக்க
வெளியே துருத்தாத அலமாரி உள்ளது
பாத்திரங்களை உடனுக்குடன் துலக்கியுலர்த்த
மின்சாரத்தில் இயங்கும் துலக்கியுள்ளது
சமையலறை என்பது
நவீனம் நவீனம் எனச்சேர்க்கப்பட்டு
அத்தனை நவீனமாகிவிட்டது
இத்தனை நவீனத்திற்குப் பிறகும்
எந்த வீட்டிலும் மாறவேயில்லை
அடுப்படியில் பெண்கள் என்ற
ஆதிகாலச் சொற்றொடர்

**சௌவி**



ஒவ்வொரு உயிருக்கும்
தனித்தனி மதுவை
தந்திருக்கிறது காலப்பூ.

◣ ப.தனஞ்ஜெயன்

சற்று முன்னர்தான் கடந்துள்ளது
சாவு ஊர்வலம்
என்னவென்றே புரியாமல்
மலங்கமலங்க விழித்தபடி
பாதை நிறைக்கும் பூக்களை
நசுக்கக்கூடும் ஏதேனும் சக்கரம்...

◣ வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்



“அப்படி என்னத்த
பெருசா வேண்டிகிட போறேன்
எல்லாரும் நல்லாயிருக்கனும்
அம்புட்டுதேன்”
சுருக்கமாக முடித்து விடுகிறாள்
அம்மா
அந்த “எல்லாரும்“
என்ற வார்த்தைக்குள்
அடங்கியிருக்கும்
அவள் வளர்க்கும்
ஆட்டுக்குட்டி முதல்
பிரசவத்திற்கு சேர்ந்த
நான்காம் வீட்டு
சின்னத்தாயி வரையிலான
அவளின் மொத்த பிரபஞ்சத்தையும் காக்க
“ஓவர் டைம்“ பார்க்க
முடிவு செய்கிறார்
“கடவுள்”......

**பிரபுசங்கர் க**



ஒவ்வொரு நள்ளிரவின்
எல்லையைக் கடந்த
அடுத்த நொடியில்

தேநீர்க் கடையை உற்சாகமாய்
திறக்கும் கடைக்காரனும்

செய்தித்தாள்களை அடுக்கி
விநியோகிக்கும் சிறுவனும்

பால் பூத்திற்கு விரைந்து
பறக்கும் பால்க்காரனும்

காய்கறி மண்டிக்கு
பரபரக்கும் அண்ணாச்சியும்

நாற்று நடுவதற்கு
சுறுசுறுப்பாகும் உழவனும்

அவசியமில்லை என நினைக்கும் ஒன்றைத்தான்

நீங்கள்
மனதை ஒருமுகப்படுத்த
அறை கதவையும்
விழிக்கதவையும் சாத்திக்கொண்டு
அலைமோதும் எண்ணங்களோடு கண்ணாம்பூச்சி
ஆடிவிட்டு
தியானம் என்று
சொல்லிக்கொள்கிறீர்கள்.

*தி.கலையரசி*



இந்த முறை வந்திறங்கிய
ஊரில்
அதே வானம்

அதே மழை கூட வரும்
அதே நிலா
வானில் கடந்து போகும்

அதே நடை பாதை
விழுந்த மல்லியில் மிதிபட்ட காயம்

அதே காற்று
சொன்னால் நம்ப மாட்டீர்கள்
அதே
இட்லிக் கடை வாசம்

அதே
குறுக்கு சந்து
சாக்கடை நறுமணம் கொஞ்சம் கூட மாறவில்லை

அதே பிழைப்பு தேடும்
வாழ்க்கை
நாட்டுக்குள் நாடோடி பயணங்கள்

தொடர்வண்டிகளுக்கு எப்போதும்
விழுகிறது
அதே சிக்னல்.

குமரன்விஜி



**தி**னமும் வேலைக்கு
பயணப்படுகையில்
தோள்களை
கட்டிக்கொண்டு
தாமதப்படுத்துகிறான்,,
சம்பாத்யம்
குறைந்தாலும்
சமாளிக்க கற்றுக்கொண்டேன்..

சாப்பிட அமர்கையில்
முழங்காலைப்பற்றியபடி
எழுந்து நின்று
“ஆ”காட்டுவான்,,
எனது குண்டு விரல்களை
குவித்து,
அந்த குட்டி வாய்க்கு
வலிக்காதவாறு
ஊட்டிவிட கற்றுக்கொண்டேன்..

புரியாத
வார்த்தைகளால்
கொஞ்சினால்,
குட்டிப்பற்கள் இரண்டு
தெரிய சிரிப்பானவன்,,
கவிதை அறிவையெல்லாம்
கழற்றி வைத்துவிட்டு
சிறு பிள்ளை மொழிகளை
கற்றுக்கொண்டேன்..

இரவுப்பொழுதுகளில்
என்மீது
காலைப்போட்டுத்தான்
தூக்கத்தை
துவங்குவான்,
எனது அசைவுகளினால்
அது
கலையாமல்
பார்த்துக்கொள்ள
பழகிக்கொண்டேன்..

எதையும்
தூக்கி வீசி
உடைப்பதே
அவன் பழக்கம்,
தூர் விட்ட
கைபேசி தொடுதிரையை
கையாளவும்,
கோடுகள் விழுந்த
கண் கண்ணாடி வழியாக காணவும்
கற்றுக்கொண்டேன்..

துறுதுறுவென
தவழ்ந்து கொண்டே
இருந்தவன்
திடீரென ஒருநாள்
தும்மல்களால்
சோர்ந்துபோனான்,
கண் அயரும்
தருணத்திலும்
கவனமாயிருக்க
கற்றுக்கொண்டேன்..

பாசமென்றோ,
தியாகமென்றோ,,
என்வசம்
எதுவுமேயில்லை,,
உண்மையில்
அவன் தான்
என்னை
வளர்த்துக்கொண்டு
இருக்கிறான்,,
அப்பாவாக...!!!

கவிதை மொழியன்

## காதல் என்பது மரணத்தின் நிசப்தப் பேரலை



கசிந்துருகும்
கருஞ்சுடர் மினுக்கத்தில்
குளிர்காய்ந்து பயந்திருப்பவனின்
சில்லிட்ட சருகுடலை
பற்றி எரியும் காதல் பெருந்தீ
ஓசையெழுப்பித்
துணை தேடுகிறது

பூவின் நைந்த
புன்சிரிப்பின் சாரம்
ஈரப்படர்வில்
இதயத்தின் நாத
மகுடி வாசிக்கும்போது
சற்றே அதன் வழிக்கோட்டில்
விலகி புரண்டு படு
பூ வருடி சாதல் கூடும்

பற்றி எரியும்
இத்தீயின் கொழுந்து
சோகச்சாயலின் இராக்கதம்
அது தீண்டி உயிர்த்தவர்
எவருமில்லை

உயிர்களை பல் திசையிலும்
பாய்த்து தேடும்
காதல் வேட்கையின் பிடியில்
துடுப்புகளே படகை
கவிழ்த்துவிடும்

உயிர் தொடும்
காலனின் நெஞ்சத்
தழுவல் தரும் பரிசுக்கு
காத்திருப்போரிடம்
உன் உடலை
கரை சேர்க்கும்
அலைகளைப் பற்றிக்கொள்
காதல் என்பது
மரணத்தின் நிசப்தப் பேரலை .

**கனியமுதுஅமுதமொழி**



**நீ**ண்ட வருடம் கழித்து
அவளை பார்க்கிறேன்
என் வாழ்க்கை சாளரத்தில்...

நேற்று வைத்த பொருளை
தேடி தர மறுக்கின்ற மனசு
பத்து வருடத்திற்கு முன்
தொலைத்த அவளை
சரியாக கண்டுபிடித்துவிட்டது...

தொலைபேசி எண்களை
என் கையில் திணித்துவிட்டு
நேரம் கிடைக்கும்போது
பேசு என்று சொல்லிவிட்டு
அவள் கிளம்பிவிட்டாள்...

இரவுகளை கடந்து
அந்த எண்ணை
பார்த்து கொண்டிருக்கிறேன்...

என்னையும் சில கேள்விகள்
கேட்டு கொண்டிருக்கிறேன்..

இனிமேல்
பேசி என்ன ஆகப்போகிறது
என்ற எண்ணம் ஒரு பக்கம்....

அவள் வாழ்க்கை
தெரிந்து கொள்ள வேண்டும்
என்ற ஆர்வம் மறுபக்கம்...

அப்படி கேட்பதென்றால்
என்ன கேட்பது
என்னை ஏன் மறந்தாய் ?
என்று கேட்கவா
உனக்கு திருமணம் ஆகிவிட்டதா ?
என்று கேட்கவா
என்னை நினைத்து கொண்டிருக்கிறாயா ?
என்று கேட்கவா...

இப்படி பல கேள்விகள்
ஒன்றோடு ஒன்று
முட்டிகொண்டு நிற்கிறது
என் தொண்டை குழிக்குள்...

பத்து வருடமாக தேடிய அவளை
இந்த பத்து இலக்கு எண்தான்
கண்டிபிடித்து கொடுக்க போகிறது
என்று நினைக்கும்போது
இந்த வாழ்க்கையின் சூட்சமத்தை
புரிந்து கொள்ள முடியவில்லை...

தேடி கொண்டிருக்கும்போது
கொஞ்சம் நிம்மதி இருந்தது
கிடைத்த போதுதான்
முழு நிம்மதியும் போனது...

அதனால் அந்த எண்ணை
தூக்கி போட்டுவிட்டு மீண்டும்
அவளை தேட ஆரம்பித்தேன்..

ஒரு பைத்தியகாரன்
தன்னை தேடுவது போல...

**லெனின்**



**ஊ**ற்றும் வேர்வைக்குள்
கிளம்பும் எரிச்சலை
அணைக்கும் மழையின்
எதிர்பார்ப்புக்கு

ஆசுவாசப்படுத்துவோரின்
ஈரத்தின் சாயல்

**சுஜாதா கண்ணன்**

**நே**ரான பாதையில்லை
வளைந்தே போக வேண்டியுள்ளது
கடலைச் சேரும் நதிகளுக்கு....

**மலர் மைந்தன்.குமரர்**



மரண விளிம்பின்
மையத்தில் இருபுறமும் நாற்றத்தை எட்டிப் பார்த்து
முகம் சுளித்துக் கொண்டே நடக்கிறீர்கள்.

எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் மாறாத ஒருவகை
உப்புச்சுவை அடி நாக்கில் சுரந்து கொண்டே
இருக்கிறது.

இதுவரை பார்த்திடாத விளக்கம் கொடுத்து விட
முடியாத ஒரு அருவருப்பான உருவம் அடிக்கடி
மனதினில் வந்து போகிறது.

“சை” “சீ” என்ற அருவருக்கும்
“ஓ”வென்று கதறி அழும்
அப்படியான ஏதோ ஒன்றை நீங்கள் சுமந்து
கொண்டுதான் இருக்கிறீர்கள்.

நீங்கள் இரசித்து, கொண்டாடி,
காதலித்த ஏதோ ஒரு ஆன்மாவிற்குள் புதைந்து
கிடக்கும்
விளக்கம் கொடுக்க முடியாத இரணமெல்லாம்
இப்படியாகத்தான் இருக்கக்கூடும்.

நேசம்
நேசிக்க படவேண்டியது
ஆனால்,
நேசிப்பதை தவிர்த்து அத்தனையையும் செய்து
முடித்து விடுகிறான்
மனிதன்.

*விசித்திரன்*



சிறு
மழலையின்
சினம் பீடித்த
பார்வையில்
நெளிய துவங்கியது
கோவில்
பிரகாரத்தினுள்
கம்பீரமாய்
வீற்றுருந்த
காளியின் சிற்பம்..

--

செம்பிஞ்சுவிரலில்
வீழ்ந்த
அரக்கனின்
நுதல்
தடவிப்பார்த்தவள்
சற்றும்
தாமதிக்காமல்
தன்மேல்
ரௌத்திரத்தை
பூசிக்கொண்டாள்..

--

சூலமேந்திய
கொற்றவையை
முறைத்துக்கொண்டே
வடிவது
செங்குருதியோயென
சந்தேகக்கணலில்
பதறித்துடித்து
தன்
பாவாடை
நுனியால்
துடைத்துவிட்டாள்..

--

தன் ஆடையில்
சிவந்த
நிறங்கண்டு
உணர்ச்சிப்பிழம்பானாள்
அழுகையையோடு
அழகான
கோபத்தையும்
தன்
வதனமெங்கும்
பூசிக்கொண்டாள்..

--

அதரம்
சுளித்து
அழத் துவங்குவாளோ..
இல்லை
உடையாமல்
உருகி
வேண்டிக்கொள்வாளோயென
திகைத்து
நிற்கிறது
காளி
சிலை..
கூடவே நானும்...

சுரேஷ்குமார் சுப்பிரமணி



ஒரு தேர்தலுக்குள் களவுபோன வாக்காளன்போல்
என்னைத் தேடிக் கொண்டிருக்கிறீர்கள்
ஓட்டுப் பெட்டிக்குள் ஒளிந்துபோன உண்மைகளாய்
நான் ஒளிந்திருப்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்
வார்த்தைச் சலவைகளில் தொலைந்ததிலிருந்து
ஓவ்வொரு பண நோட்டிலும்
உங்கள் அழுக்கு ரேகை
தொடக்கூசும் ஒன்றிரண்டு விரல்களிலும்
இன்னும் காயாமலேயே இருக்கிறது ‘மை’

முனியாண்டி ராஜ்



**நே**ற்று என் தாத்தா
பசியின் வேதனையில்
இறந்தார்
என் அப்பா வறுமையின்
பிடியில் தான்
கைதியாய் இருந்தார்
நானும்
அதே பிடியில் தான்
கரைகின்றேன்
வறுமைக்கு
பிறந்தவர்கள்
நாங்கள்.....

வறுமை எங்கள்
வாசல்படியிலே
தூங்குகிறது

ஆசையைத் துரத்தினாலும்
மூன்று வேளையும்
வயிற்றில் ஒட்டிக்கொள்கிறது
பசி

நாங்கள்
பெற்ற
விதியின் தவத்தால்
வறுமையோடு
தான் விழா
வறுமையோடு
தான் உலா
வறுமையோடு தான்
சல்லாபம்,
வறுமையோடுதான்சஞ்சலம்
சமரசம்
வறுமையோடு தான்
இறப்பும்
வறுமைக்கு பிறந்தவர்கள்
நாங்கள்
பிறகு எப்படி
இருக்க முடியும்?

ஏக்கத்திலும்
தூக்கத்திலும்
துக்கத்திலும்
கரைகிறது
எங்கள்
வாழ்க்கை....
மீண்டுவிடுவோம் என்ற
நம்பிக்கையின் பிடிப்பில்
நகர்த்திகிறோம் நாட்களை

**செ.புனிதஜோதி**



உயிரோடிருப்பவனைப் பற்றி
கவிதையொன்றை
எழுதிக்கொண்டிருக்கிறேன்
இறந்து விட்டதாய் தகவல் சொல்கிறார்கள்...

சதா பேசிக்கொண்டிருப்பவரைப்
பற்றி
எழுதிக்கொண்டிருக்கிறேன்
அவர் ஊமையாகிவிட்டார் என்கிறார்கள்...

கடும் கோடையைப்பற்றி
எழுதிக்கொண்டிருக்கிறேன்,
மழையில் நனைந்தபடி வீட்டுக்குள் நுழைகிறார்கள்...
பள்ளிக்குச் சென்று வீடு திரும்பிய பிள்ளைகள்,

நிலவைப்பற்றி
எழுதிக்கொண்டிருக்கிறேன்,
சூரியனை போல் சுட்டெரிக்கிறாள் மனைவி
வீணாய் நேரத்தைக் கழிப்பதாய் சொல்லி,

சில நிமிடங்களுக்கு முன்பு
காணாமல் போன குடத்தைப்
பற்றி
எழுதிக்கொண்டிருக்கிறேன்...
போன மாதம் தொலைந்து போன அண்டா ஒன்று
கிடைத்துவிட்டதாய் சொல்கிறார்கள்....

நான் எழுதுவதெல்லாம் எதிர்மறையாக
நடக்கிறதென
எழுதக்கூடாதென பேனாவை
மூடுகிறேன்....
என்னைப்பற்றி யாரோ ஒருவன் கவிதை
எழுதிக்கொண்டிருக்கிறான்!

மு.முபாரக்



முகன்
உன் முகத்தின் பிரதியை
ஏற்கனவே பார்த்திருக்கிறேன்
உம்முகனாய் இருப்பதால்
உன் பின்னால்
போதிமரம் வளர்ந்துவிடுமா?
அழுமுகனாகவும் அடிக்கடி
என்னிடம் புலம்பியிருக்கிறாய்...
ஆனாலும் அவ்வப்போது
குரைமுகனாக மாறிவிடுகிறாய்..
களிமுகம் ஒன்றை
எப்போதாவது அணிந்திருக்கிறாயா?
சிடுமுகம் உன்னோடுவே
ஒட்டிக் கொண்டிருக்கிறது...
தெளிமுகனாய் இதுவரை உன்னை
யாரும் பார்த்ததேயில்லை
பரிமுகனாய் எப்போதும்
ஓடிக்கொண்டேதான் இருக்கிறாய்..
சுளிமுகம்
புன்னகையைச் சாப்பிட்டு விடுகிறது
ஒளிமுகனென்று
யாரவது சொன்னால் நம்பிவிடாதே
குறைமுகன் என்பதை
கண்ணாடிதான் அடையாளம் செய்கிறதே
நரிமுகனாய் மாறுவதற்கேன்
முயற்சிக்கிறாய்...
புதைமுகமல்லவா நம் முகமூடி
இரு! கழற்றி வைத்த முகத்தை
மாட்டிக் கொள்கிறேன்
யாரோ வருகிறார்கள்....

**முகமது பாட்சா**



**ஏ**ன்
உன்னுடைய கவிதைகள் எல்லாம்
கண்ணீர் வடித்தபடியே பேசுகிறது
என்று கேட்கின்றனர்...

என்ன செய்வது?
ஒரே நேரத்தில் ஆனந்தத்தையும்
துக்கத்தையும் பேசுகின்றன
அவைகள்...

கேளிக்கையாய்
வெளிவந்த வார்த்தைகளுக்குக்
கைதட்டியக் கரங்கள்
வாழ்க்கையை வடித்தபோது
கைகட்டிக் கொண்டதென்ற
துக்கமும்

பலரும்
உதறிக் கடந்துப் போனபின்
சில விரல்களேனும்
தடவிப் பார்க்கிறதே என்ற
ஆனந்தமும்

ஒருசேர
உண்டுக் கண்ணீர் வடித்துப்
பேசுகின்றன...

என்ன செய்வது?
விதைகள் விரைவில் முளைத்துவிடும்.
புரட்சிகளுக்குச் சிலகாலம்
தேவைப்படும்...

அன்று
சிறு பொறியாயேனும்
என் கவிதைகளும்
இருக்கும்...

**கா.ரஹ்மத்துல்லாஹ்**



**அ**ம்மாவை அடித்ததற்காக
இரும்பு கம்பியை வைத்து
ஒருமுறை

அக்காவை ஏசியதற்காக
விறகு கட்டையை வைத்து
ஒருமுறை

தங்கையை திட்டியதற்காக
கூர்நிறைந்த கற்களை கொண்டு
ஒருமுறை

அண்ணனை பேசியதற்காக
வெந்நீர் ஊற்றி
ஒருமுறை

தம்பியை துரத்தி விட்டதற்காக
கால்களால் எட்டி உதைத்து
ஒருமுறை

இப்படி ஒவ்வொரு முறையும்
அப்பாவை தண்டிக்க முடியாமல்
அவரின் மிதிவண்டியை
தண்டித்து கொண்டிருந்த
எனக்கு அவரின் இறப்புக்கு முன்வரை தெரியாமல்
தான் இருந்தது

அப்பாவை போலவே அவரின்
மிதிவண்டியும் வலிகளை தாங்கி தான் வாழ்வினை
கடத்தி போனர்களென்று ...!

**கதிர் அவன்**



என்னைப் பற்றி
எப்படி வேண்டுமானாலும்
நினைத்துக் கொள்ளுங்கள்

உங்களது நாட்குறிப்பில்
எதை வேண்டுமானாலும்
எழுதிக் கொள்ளுங்கள்

பிழைக்கத் தெரியாதவன் என்ற
பெயரைச் சூட்டி
சிரித்துக் கொள்ளுங்கள்

உங்களுக்கெல்லாம்
பதில் சொல்ல
இப்போது நேரமில்லை

தோட்டத்தில்
புதிதாக மலர்ந்த
பூவொன்றை பார்க்கப்
போய்க்கொண்டிருக்கிறேன் நான்!

**உஸ்மான்**

விரியும் சிறகுகள்
அருகே வரும்
பறவையின் வானம்!

**சு.கேசவன்**



இந்த மழையை
அறவே பிடிப்பதில்லை
ரம்மியங்களை கிளர்த்துவதாலோ
குளிர்மையை கவிழ்த்துவதாலோ
தாபத்தை நிமிர்த்துவதாலோ
இழந்தவற்றை எண்ணிக்
கணக்கிறுப்பதாலோ
இருந்துவிட்டுப் போகட்டும்
ஐந்தடியாகிய நான்
எட்டடிச் சிறகுகளை
தருவிக்கப் பணித்திருக்கிறேன்
ஒரு பேடியைப்போல்
குடைகொண்டு கீழ் ஒளிவதற்கு
கழுகைப்போல் விசும்பிற்கப்பால்
விசும்பிக் கொள்ளலாமென.

**காயத்ரி ராஜசேகர்**



இசையை சிலிர்ப்பை
நறுமணத்தை சிறகசைப்பை
கவிதையை கனவை
காதலை அமைதியை
ஆராவாரத்தை ஆசையை
அழகை குழந்தைமையை
ஞானத்தை சுவையை
கதிரை நிலவை
விண்மீனை கடலலையை
முகிலை மழையை
மலையை மலரை
ரசனையை வனத்தை
சுருக்கமாக வாழ்வை
என் கொல்லைப்புறத்திலும்
வாசலிலும் நிறுத்தி வைக்கிறது
நட்டு வளர்த்த மரங்கள்
அதைதான்...
நீங்கள் மரமென்கிறீர்கள்
நான் பிரபஞ்சம் என்கிறேன்.

கோ.லீலா

## என் முகக்கவசம்!




**கா**தோடு உறவாடி கதைப்பேசுகிறது!
மூச்சுக்காற்றை தூய்மையாக்குவதாக
தான் தூய்மை இழக்கிறது!
ஏனோ முகம் மறைத்து
என் முகமூடிகளை கொஞ்சம் தூரமாக்குகிறது!
பொய்யான புன்னகையை ஒத்திவைத்து
கொள்கிறது!
என் சோக முகத்தை கொஞ்சம்
துடைத்து மறைத்து விடுகிறது!
கண் கரிக்கும் கண்ணீரையும் கொஞ்சம் கன்னத்தில்
வழிவதை மறைத்து விடுகிறது!
அலட்சியமாக என்னை பாதுகாப்பதாய் மறைத்து
விடுகிறது!
கிருமிகளோடு போராடி என் சுதந்திர உணர்வை
பறைசாற்றிக்கொண்டே
கொரோனாவோடு போராடுகிறது!

**நீரை.பாத்திமா**

**மூ**ழ்கி எழுகிறது படகு
மூழ்க விடாமல் மீட்க வேண்டும்
அவசரத்திற்கு வைத்த அடகு.

**பொம்மிடி மோகன்தாஸ்**

## செல்லாத காசு



ஆயிரம் ரூபாயை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

“ஆம் அது வெள்ளை சட்டைபையினுள் தெரியும்
இரண்டு ஐநூறு”

பர்சுக்குள் வயிறு உப்பிய
“பத்து நூறுகள்”

அல்வாவும் லட்டும் சாப்பிட ஏதுவாக
“ஐம்பதும் இருபது பத்தாக”
தானே பெருங்கூட்டமென
நம்பிய கர்வம்

ஒருரூபாய்கள் சேர்ந்த பலம் என தன்னைத்தானே
சமாதானப்படுத்திக்கொண்ட முட்டாள்

சில கணம் கடந்து பூண்டு ஊறுகாய் வாங்கும்
“ஐந்து” ரூபாயானது

சாயுங்காலம்
மெல்ல நடந்து பிச்சைகாரனும் வாங்காத
கடைசி ஒரு ரூபாயாகி
தன் தடம் தெரியாமல்
மறைந்து போனது

கடைசியில்
கண்களை சுழற்றி யாரும் துணைக்கு வராத
திசைகளை பார்க்கிறது
நாக்குகள் இல்லாமல்
பிறந்த சுயம்..!

க.ராஜகுமாரன்



அகவையென்பது
ஆண்டுகளின் ஓட்டம் தானே
அவள் எலும்புகளுக்கு
எண்பது இருக்கும்.

இருபது வயதில்
அவளின் இடுப்பெலும்புகள்
நொறுங்கித்தான் வெளிவந்தது
அந்தப் பிண்டம்

அவளின் முப்பது வயதில்
பிண்டம்
முடக்குவாதத்தால் முடங்க
பிண்டத்தை இதயத்தில் தூக்கியே
சுக்குநூறாய்ப் போனது
இதய எலும்புகள்.

இயக்கமற்ற பிண்டத்தின்
கை கால்களை இயக்கவே
இவளின் கை கால்கள் இயங்கியது
நாற்பது வயதில்.

வேண்டாத தெய்வங்கள்
இல்லை
பூஜை அறையோடு வீடுகளெங்கும்
சுவாமிகள் அருள் பாலிக்கும்
புகைப்படங்கள்.
ஒரு வழியாக முடக்குவாதத்தை
வேரறுத்தது
அவள் பிரார்த்தனைகள்.

பிண்டம் நடக்க ஆரம்பித்தது
மெதுவாய் ஓட ஆரம்பித்தது
படித்து வேலையும் வாங்கியது.
பிண்டத்துக்கு கண்ணாலமும்
செய்து வைத்தாள்.
பிண்டத்திற்கு வாரிசு பிறந்தது
அதை ஆளாக்க இவளின்
மிச்சமுள்ள முறிந்த எலும்புகளெல்லாம்
முடங்கின.

பிண்டம்
அவளை முதியோர் இல்லத்தில்
சேர்த்தது.

அங்கும்
எம் மவன் நல்லாருக்கணும்
கை கூப்பி தொழுகிறாள்
அப்பிண்டத்திற்காய்
தன் அண்டம் தொலைத்தவள்.

**வீரசோழன்.க.சோ. திருமாவளவன்**



**அ**ந்தப்பக்கமாய் ஓர்
கனத்த முதியவரின்
நடுங்கும் குரல்
யாரு ஈஸ்வரியா என
இந்தப்பக்கமாய்
பொதுவாய் பொறுமை
இழக்கும் நான்
சிடுசிடுக்கிறேன் நான் அது அல்ல என
சுமார் ஆறு முறையும் சலிப்பின்றி முயலும்
முதியவரின் நடுங்கும் விரல்கள்
எண்களை தவறுதலாய்
தொட்டிருக்கலாம்
அல்லது
ஈஸ்வரி வேண்டுமென்றே
அவருக்கு தவறெண்ணை தந்திருக்கலாம்
முதியவர் அனாதை இல்லத்தில்
இருந்திருக்கலாம்
அல்லது மகன் , மருமகள்லாள்
கைவிடப்பட்டு நின்றிருக்கலாம்
குறைந்த பட்சமாய்
அது ஒரு தவறான எண்ணுக்கு
வந்த
தவறான அழைப்பென
இப்பாழும் மனமும் இதோடு
விட்டுத்தொலைத்திருக்கலாம்......

கோ. ஸ்ரீதரன்



நனைந்த கூடு
வெதுவெதுப்பாய்
இருக்கிறது
தாய் பறவையின்
சிறகுகள்.!

**சுரேஷ்பாபு ராசேந்திரன்**

மதயானைகளைப் போல் அதகளம் செய்யும் என்
ரத்த அணுக்களை
அடக்கும் அங்குசம் உன் கையிலிருக்கிறது
மின்சாரத்தை தொட்டுக் குழைத்து மேனி எங்கும்
பூசிவிடுவது போலும் நீ என்னை பார்க்கிறாய்
நீ கண் சிமிட்டும் போதோ
இருளும் ஒளியும் என்னை மாறி மாறி
பந்தாடுகின்றன
நீ வந்ததும் காட்சிகள் துலக்கமாகிவிட்டன
மழைக்கால பூக்களைப் பார்க்கும் போது கண்கள்
பளிச்சென்று மாறிவிடுமே அதைப்போல
கனவில்
உன் வாசம் அடிக்கும் போதெல்லாம்
இரவு தளும்பி
இன்பம் தெறிக்கிறது என் மீது
ஒற்றை எண்ணாக நான் நின்று கொண்டிருக்கிறேன்
பூச்சியங்களை ஆயிரக்கணக்கில் உருட்டிக் கொண்டு
வந்து என் பக்கத்தில் நிறுத்துகிறது உன் காதல்

**கார்த்திக் திலகன்**



**க**ட்டாந்தரையில்
தூக்கி வீசப்பட்டு
வாய்பிளந்து துள்ளும்
மீன்களைப் போல,
நாங்கள் துடிப்பது
தெரியவில்லையா கடவுளே ?

ஒரு குட்டி விமானத்தின்
எந்திரக் கண்களுக்கு
இத்தனை பிணங்கள்
தெரியும் போது - உன்
மூன்றாம் கண்ணை
புரையா மறைக்கிறது ?

மரணங்கள்கூட
பழக்கப்பட்டவைதான்,
ஆக்ஸிஜன் மட்டுமல்ல
எரிகட்டைகள் வாங்கக்கூட
வக்கில்லாத போதுதான்
வலி தொடைநுழை
வண்டாகி வலுக்கிறது !

“உயிர்காக்க உதவும்
ஏதேதோ இருக்கின்றனவாம்”,
ஒப்பாரிச் சத்தத்தில்
இதைக் கேட்டுத்தான்
பலரும் அழுதார்களாம் !

பெருந்தொற்று காலத்தில்
எல்லாத் திசையிலும்
வறுமையெனத் தெரியும்,
உன் மனசாட்சியை - எங்கே
அடமானம் வைத்தாய் ?
எவ்வளவு கொடுத்தார்கள் ??
என்றுகூட கேட்டு விட்டேன் !

தொற்றுகளை தடு,
அல்லது மருந்துகொடு
அல்லது - அடுத்தடுத்த
மனிதப் படைப்புகளிலாவது,
வெளியே எடுத்து
கழுவிக் காயவைக்கும்படி
நுரையீரல்களை
படைத்துத் தொலை !

இதை கேட்டுவிட்டு,
பாகற்காயைப்போல
ஒற்றைக் காதில்
தொங்கிக் கொண்டிருந்த
முகக்கவசத்தை
இரண்டாம் காதிற்குள்
இழுத்து விட்டபடி
நகர்ந்துவிட்டார் கடவுள் !

பின்பொரு நாள்
அவரை - தடுப்பூசிக்கான
இரண்டாம் தவணை
வரிசையில் பார்த்தபோது,
என் கோவத்தை - நானே
கொலை செய்துவிட்டேன் !

**வினோதன்**



சிந்தனை கலைந்து
நெடுநேரம் கடந்து
தலைமீது கைவைத்து
தன்னைச்சுற்றி நின்றவர்களை
மீண்டும் ஒருமுறை நோட்டமிட்டு
நிறுத்தப்படாத அந்த
சிரிப்பு

யாவர்க்கும் பதிலளிக்க முடியாத
ஆச்சரிய நிகழ்வு
அனைத்தும்
கடந்து போனாலும்
அன்றொலித்த அதே சிரிப்புக்குரலில்
வெறிச்சோடிக்கிடந்த அந்த பொழுதுகள்
மீண்டும் சிரிப்பினில்
தேய்ந்து போன நிலவாகத்
தேம்பிக் கொண்டிருக்கின்றது

உணர்வற்ற விரக்திக்குரலில்
மௌனம் கலைக்கும்
புரிதலற்ற மொழியில்
அவனுக்குள்ளே அவன்
பேசிக்கொள்ளும் உடலசைவுத்
தோற்றம் காண்பவர்கள்
குத்தும் முத்திரைதான்
பைத்தியம்!

**கோவை சசிகுமாரர்**



**பி**ரித்து கொடுத்த
கொஞ்சம் உதவியை
பூனைக்கும் பிரித்து கொடுத்தவள்
கிழிசல்களையும்
ஏற்றத் தாழ்வுகளையும் உடுத்தியிருந்தவள்
என்ன சொல்கிறாள்
நானென்ன நீயென்ன
அந்த பூனையென்ன
எல்லாமே ஒன்றாகத் தான் துடிக்கிறது
உயிரில் கிழிசல்களின்றி!!!


**கி.கவியரசன்**



**ச**மையலறையில்
சேலையைப் பிடித்துக் கொண்டோ
அமர்ந்திருக்கும்போது
மடியில் படுத்துக் கொண்டோ
தூங்கும்போது
கழுத்தைப் பிடித்துக்கொண்டோ
எப்போதும் தன் அம்மாவோடு
இணைபிரியா தோழியாய் இருப்பவள்

ஒளிப்படம் எடுக்கும் தருணத்திற்காக
ஒரு கம்பை பற்றிக் கொண்டு
மேலேறி வளரும் பூசணிக்கொடியை
விரல்களால் பற்றிக் கொண்டு  நிற்கிறாள்
கவிநயா பாப்பா.

**பட்டியூர் செந்தில்குமார்**



**அ**வசரமொன்றுமில்லை!
எவருமற்ற
அந்த அறைகளுக்குள்
நுழைந்து
நான்
என்ன
செய்துவிடப்போகிறேன்

ஏன்?
என்று கேட்கவோ
எப்படி?
என்று
விசாரிக்கவோ
அப்படியா?
என்று
கேட்டுக்கொள்ளவோ
ஆளில்லா
அந்த வீட்டுக்குள்
அப்படி
என்னதான்
கிடைத்துவிடும்
எனக்கு!

ஒருவர் மட்டுமே
உலவித் திரிகிற
அனுபவத்தினால்
சலித்துப்போன
அந்த அறைகளெல்லாம்
வெறுப்புடன்
என்னைப் பார்த்து
வேறு பக்கம்
திரும்பிக்கொள்வதாய்ப்
படுகிறது
எனக்கு!

சலனங்களிடையே
கொஞ்சம்
ஓய்வு!
இரைச்சல்களிடையே
கொஞ்சம்
அமைதி!
பரபரப்புக்களிடையே
கொஞ்சம்
நிதானம்!
விவாதங்களுக்குப்பின்
ஒரு முடிவு!
இவைதானே
அழகானது?

மௌனம்
சுகமானது
என்பதற்காக
மயான அமைதி
இரசிக்குமா என்ன!

**வளவன் கரிகாலன்**

படைப்பு பெருமையுடன் வழங்கும்



# என்னழகே என்னுயிரே

வெளியீடு விரைவில்